

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (29.9.2024) முகாம் அலுவலகத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (29.9.2024) முகாம் அலுவலகத்தில், பால்வளத் துறை அமைச்சர்.ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.9.2024) முகாம் அலுவலகத்தில், அமைச்சராக அறிவிக்கப்பட்டுள்ள .வி.செந்தில் பாலாஜி சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.



முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களை நேற்று (29.9.2024) முகாம் அலுவலகத்தில், புதிய அமைச்சராக அறிவிக்கப்பட்டுள்ள ஆர்.இராஜேந்திரன் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வ கணபதி , சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களை நேற்று (29.9.2024) முகாம் அலுவலகத்தில், புதிய அமைச்சராக அறிவிக்கப்பட்டுள்ள முனைவர் கோவி.செழியன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் சு.கல்யாண சுந்தரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் மற்றும் கழக நிரிவாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (29.9.2024) முகாம் அலுவலகத்தில், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு

# மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தமிழ் மாநிலக் குழு வாழ்த்து!

## மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் செய்தி!



சென்னை, செப்.30-

புதிதாகப் பதவியேற்றுள்ள துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழு வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

“தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராகப் பதவி யேற்றுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சி.பி.எம். மாநில செயற்குழு சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், தமிழக அமைச்சரவையில் புதிதாக இடம் பெற்றுள்ள அமைச்சர்கள் செந்தில் பாலாஜி, பனமரத்துப்பட்டி ராஜேந்திரன், கோவி. செழியன் ஆகியோருக்கு சி.பி.எம். சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



கழக பவள விழா ஆண்டின் முப்பெரும் விழாவை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு நேற்று (29.09.2024) அம்பத்தூர், எஸ்.எம்.கே. திருமண மண்டபத்தில் சென்னை கிழக்கு மாவட்ட மருத்து அணி சார்பில் நடைபெற்ற மாபெரும் மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார். உடன் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் திருமதி ஜி. சாந்தகுமாரி, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் – சென்னை காவல் துறை இணைந்து நடத்திய

# போதைப் பொருள் இல்லாத சமூகத்தினருக்கான விழிப்புணர்வு மாரத்தான்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் – போட்டியைத் தொடங்கி வைத்து பரிசுகள் வழங்கினார்!

சென்னை, செப். 30 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (29.09.2024) சென்னையில் Council for Leather Exports, India, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் மற்றும் பெருநகர சென்னை மாநகர காவல்துறை ஆகியவை இணைந்து நடத்தும் Soles for Souls Marathon 2024 போதை பொருள் இல்லாத சமூகத்திற்கான விழிப்புணர்வு மாராத்தான் போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்து அதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:-

நிக்கோட்டினை சேர்மமாக கொண்ட உணவுப் பொருட்களுக்கு தடையினை தமிழ்நாடு அரசு 2013ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில் கடந்த மே மாதம் 23ஆம் தேதி முதல் கூட அந்த தடையாணை ஓராண்டு நீடிக்கப்பட்டு உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் உணவு பாதுகாப்பு அலுவலர்கள், காவல்துறை அலுவலர்களுடன் இணைந்து ஆய்வு செய்து 391 குழுக்களாக பிரிக்கப்பட்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். தடை செய்யப்பட்ட பான்பராக், குட்கா போன்ற பொருட்களை பறிமுதல் செய்வதற்கும், நடவடிக்கை எடுப்பதற்குமான நடவடிக்கைகள் என்பது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 01,11,2023 முதல் முதல் 2024 செப்டம்பர் 15 வரை தமிழ்நாடு முழுவதும் 3,06,157 கடைகள் மற்றும் குடோன்கள் மற்றும் வாகனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தடைசெய்யப்பட்ட குட்கா, பான் மசாலா போன்ற பொருட்களை விற்பனை செய்த 19,822 கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டு இருக்கிறது, பறிமுதல் செய்யப்பட்ட குட்கா மற்றும் போதைப் பொருட்கள் 132890 கிலோ கிராம் ஆகும்.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருட்களின் மொத்த மதிப்பி ரூ.10.87 கோடி ஆகும். அந்த அளவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து இதுபோன்ற நடவடிக்கைகள் எடுப்பதும், மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற நிகழ்ச்சியாக உறுதிமொழி ஏற்கின்ற நிகழ்வு தொடர்ந்து 3 ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் பெருநகர காவல் துறை அதை மிகச் சிறப்பாக மேற்கொண்டு, இன்றைக்கு தமிழ்நாடு முழுவதிலும் காவல் துறையின் சார்பில் இந்த உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்று அவை இந்திய அளவிலும், உலக அளவிலும் கூட அந்த உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி சாதனை படைக்கப்பட்டு இருக்கிறது. இப்படி பல வழிகளில் இளைஞர்கள் சமுதாயத்தினரிடையே போதைப்பொருள் பழக்கமில்லாத சமூகம் என்பதை உறுதிபடுத்துவதற்கும், போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு என்பதை உறுதிப்படுத்துவதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை காவல்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, உள்ளாட்சிதுறை போன்ற பல்வேறு அரசுத்துறைகள் ஒன்றிணைந்து முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு மிகச் சிறப்பாக செய்துக் கொண்டிருக்கிறது.

மேலும் மீண்டும் ஒரு விழிப்புணர்வு நிகழ்வாக ஒன்றிய அரசின் Council for Leather Exports, India, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் மற்றும் பெருநகர சென்னை மாநகர காவல் துறை ஆகியவை இணைந்து நடத்தும் Soles for Souls Marathon 2024 போதை பொருள் இல்லாத சமூகத்திற்கான விழிப்புணர்வு மாராத்தான் இன்று தொடங்கி வைக்கப்பட்டது. 10 கி.மீ, 5 கி.மீ, 3 கி.மீ என்கின்ற தூரங்களுக்கான மாரத்தான் விடியற்காலை 5.30 மணிக்கு தொடங்கப்பட்டு இதில் ஏறத்தாழ 10,000 பேர் பங்கேற்றிடும் வகையில் இந்த மாரத்தான் வெற்றிகரமாக நடத்தி முடிவுற்றிருக்கிறது. குறிப்பாக இந்த மாரத்தான் 100% வெற்றி என்று எடுத்துக் கொண்டால் 100% இளைஞர்கள் மற்றும் மாணவர்களாக இதில் பங்கேற்று வெற்றி பெற்றிருப்பது என்பது எந்த சமூகத்தினருடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமோ, எந்த சமூகத்தினருக்கு இச்செய்தி சென்றடைய வேண்டுமோ அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களே இந்த மாரத்தான் போட்டியில் பங்கேற்று ஓடி இருப்பது என்பது ஒரு வரலாற்று சிறப்பு.

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடர்பான கேள்விக்கு**

அந்த மாற்றத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிகச்சிறப்பாக தந்திருக்கிறார்கள். இன்றைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடத்திலும், பொதுமக்கள் அவர் போகும் இடங்களில் எல்லாம் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எப்போது துணை முதலமைச்சர் பொறுப்பு வழங்கப்படும் என்கின்ற வகையில் அவரிடத்திலேயே கோரிக்கை வைத்துக் கொண்டிருந்தார்கள். பொதுமக்கள் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த திராவிட முன்னேற்ற கழக தொண்டர்களின் எதிர்பார்ப்பை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பூர்த்தி செய்துள்ளார்.

ஆக தமிழ்நாட்டின் வரலாற்றில் இன்று மகிழ்ச்சி கொள்கின்ற ஒரு நல்ல நாளாகும். மேலும் அவர் துணை முதல்வராக அறிவிப்பதற்கு முன்பாகவே இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை இன்று உலகளவில் தமிழ்நாடு விளையாட்டுத் துறை ஒரு தலைமையகமாகவே மாற்றித்தந்திருக் கிறார்கள். அவர் பொறுப்பேற்றபிறகு குறிப்பாக விளையாட்டுத் துறையில் பல பிரிவினர் பல வழிகளில் பெருமைப்பட்டிருக்கிறார்கள். பார்முலா 4 என்கின்ற கார்பந்தயம் போட்டிகளாக இருந்தாலும் சரி, வாலி பால் போன்ற போட்டிகளாக இருந்தாலும் சரி, முதலமைச்சர் கோப்பை போன்ற போட்டிகளாக இருந்தாலும் சரி, தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்திடும் வகையில் இளைஞர் சமுதாயத்தினருக்கு, இளைஞர் சமுதாயத்தின் சக்தி என்பது தமிழ்நாட்டில் சுமார் 2 கோடி என்கின்ற அளவில் இருக்கின்றது.

இந்த 2 கோடி இளைஞர்களின் விழிப்புணர்வாக அந்த துறையை மிகச் சிறப்பாக வழி நடத்தி கொண்டிருக்கிறார். அந்தவகையில் ஏற்கெனவே பல சாதனைகளை செய்துக் கொண்டிருக்கிறார், விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்குபவர்களுக்கு குறிப்பாக வெளிநாடுகளில் ஒலிம்பிக் போன்ற போட்டிகளில் பங்கேற்பவர்களுக்கு நிதி ஆதாரத்தை அதில் ஏழ்மை நிலையில் உள்ள இளைஞர்களுக்க பல்வேறு வகைகளில் பொருளாதார உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கும் மேலாக இது வரை அவர் பொறுப்பேற்றபிறகு, 100 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திடும் வகையில் அரசுப் பணிகளை தந்திருக்கிறார், இப்படி பல சிறப்பான திட்டங்களை தந்திருக்கும் அவர் ஏற்கெனவே சிறப்பு திட்ட செயலாக்கத்துறையும் தன்வசம் வைத்திருந்த காரணத்தினால் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதிலும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறைக்கு உறுதுணையாகவும், திட்டங்கள் எப்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை ஆய்வு செய்திடும் வகையில் தொடர்ந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் Council for Leather Exports, India தலைவர் ராஜேந்திர குமார் ஜலான், நிர்வாக இயக்குநர் செல்வம், கூடுதல் காவல்துறை இயக்குநர் டாக்டர்.அமல்ராஜ், ஆகியோர் கலந்து கொண்டனர்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தலைமையில் தமிழ்நாடு துணை முதல்வராக உதயநிதி ஸ்டாலின் அறிவிக்கப்பட்டதை ஒட்டி பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி பட்டாசு வெடித்து கொண்டாடப்பட்டது அப்பொழுது மண்டல தலைவரும் பகுதி செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர்கள் இ. எஸ். பெர்னார்ட், ஏ. கே. கருணாகரன் பகுதிகளில் நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஆயிரத்துக்கு மேற்பட்டோர் உடன் இருந்தனர்.